# அருள் ஒளி



வித்தக விநாயகர் விரைகழல் போற்றி

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

இலங்கை

கார்த்திகை மாத இதழ்

மலர் 51

2006

அழியா அழகு
அன்பின் உருவம்
அருமை அருளாளன்
இன்பப் பிறவி
ஒளிவளர் விளக்கு
ஞானக் கொழுந்து



சைவநெறி காத்த சான்றோன்

# வாகீச கலாநிதி கி.வா.ஜெகநாதன் ஐயா

அவர்களின்

## நூற்றாண்டு விழா

## நினைவுப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

*ஆசிரியர்:*

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

*உதவி ஆசிரியர்:*

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2006 விபய வருடம் கார்த்திகை மாதம்

மலர் 51

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல, QD/74/NEWS/2006Y}


## மக்கள் துயர் தீர்க்க வழிபாடு செய்வோம்!

யாழ்ப்பாண குடாநாட்டில் கடந்த சில மாதங்களாக மக்கள் படும் துன்பங்களுக்கு எல்லையில்லை. பசியால் துடித்த மக்களுக்கு ஆறுதல் கிடைக்க முன்பே கொடிய காச்சல் (சிக்குன் குனியா) நோய் மக்களை வேதனைப்படுத்தி வருகிறது. என்றுமில்லாதவாறு மக்கள் மிகுந்த துயரை அனுபவித்த வண்ணமாக துடிக்கிறார்கள். சைவசமய வரலாற்றில் கொடிய நோயில் மக்கள் வருந்திய போதெல்லாம் அருளாளர்கள் தோன்றி ஆறுதல் படுத்திய உண்மைகளை நாம் படித்திருக்கிறோம். வெப்பு நோய், சூல நோய் முயலகன் நோய் என மக்களை நோய்கள் ஆட்கொண்ட போதெல்லாம் அவர்கள் முன் இறைவன் தோன்றி அவர்களை ஆற்றுப்படுத்தினார். நாங்கள் செய்த தவக்குறைவால் அருளாளர்கள் இன்று எமக்கில்லை. அபயகரங்களால் எம்மை அரவணைக்க யாருமில்லை. வைத்தியசாலைகளில் மருந்து இல்லை. நோயாளருக்கு உதவக்கூடிய உணவுப் பொருள் இல்லை. எத்தனை அப்பாவிகள் கடந்த மாதங்களில் நோயில் கிடந்து மடிந்துள்ளனர் என்பதை உலகம் உணரும். இக்கட்டான இச்சூழலில் எமது ஆலயங்கள் சமய நிறுவனங்கள் தங்களால் இயன்ற உதவிகளை பொதுமக்களுக்கு செய்ய முன்வராது இருப்பதும் கவலைக்குரிய விடயமாகும். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வழமை போல் தனது அன்னதானப் பணியை இன்று வரை தொடர்கிறது. மிகச் சிரமமான கால கட்டத்திலும் அன்னை சிவத்தமிழ் செல்வியின் கட்டளைப் படி அன்னதானப்பணி தொடர்கிறது. பல மக்கள் ஆறுதல் அடைகின்றனர். செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் அடையா வாயிலாக பசி தீர்க்கும் பணியையும், இலவச மருத்துவப் பணியையும் செய்து வருவது மெச்சத்தக்கது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கௌரவ செயலாளர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் குடாநாட்டு மக்கள் படும் அவலத்திற்காக எமது சமயம் சார்பில் குரல் கொடுத்ததோடு, மூவாயிரம் பால் மா பைக்கேற்றுக்களை யாழ் குடாநாட்டிலுள்ள சைவச் சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், புற்றுநோயாளருக்கு அனுப்பி வைத்து உதவியமை மகத்தான காரியமாகும். ஏனைய சமய நிறுவனங்கள் மௌனமாகவே இருப்பது வேதனை தருகிறது.

சைவ ஆலயங்களில் பெரிய களஞ்சிய அறைகள் கட்டப்பெற்று அவற்றில் உணவுப் பொருள்கள் பாதுகாக்கப்பட்டு, இடர் வந்த வேளைகளில் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதை வரலாற்று நூல்களில் காணக்கூடியதாகவுள்ளது. இன்று ஆலயங்களில் வெறும் கட்டிட நிர்மானப் பணிகள் மட்டும் கோடிக்கணக்கான செலவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதை விட இத்தகைய பணிகளில் ஆலயங்கள் ஈடுபடாமல் இருப்பது கவலைக்குரியது. பசியால் மக்கள் துடிக்கும் போது அன்னதானப் பணிகளைக்கூட வசதி படைத்த ஆலயங்கள் செய்ய முன்வராதமை மிகவும் குறையாகப் பேசப்படுகிறது. ஆலய நிர்வாகிகள் அவசர காலப் பணிகளில் மக்களுக்கு உடனடியாக உதவ முன் வரவேண்டும். நோயாளரை ஆறுதல் படுத்தச் சமய நிறுவனங்கள் தங்களாலான தொண்டினை முன் வந்துசெய்ய வேண்டும். “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”. மக்களைக் காக்கும் மானிட நேயப் பணிகளை இறைவனின் பெயரால் உதவ அனைவரும் முன்வரவேண்டும்.

எத்துயரையும் போக்கும் எங்கள் தெய்வங்களே! போதுமென்ற அளவுக்கு மக்கள் வேதனைகளை அனுபவித்துத் துன்பப்படுகிறார்கள். நாம் செய்த குற்றங்களை எல்லாம் மன்னித்து நல்வாழ்வு நீ தரவேண்டும். தேவர்கள் துன்பப்பட்டு இறைவா என்று ஒலமிட்ட போது ஓடி வந்து உதவியது போல் எம்மவர் துயர் போக்க நல்லருள் செய்ய வேண்டுமென்று வழிபாடு செய்வோம்.

**ஒருங்களி நீ இறைவா என்று**
**உம்பர்கள் ஓலமிடக் கண்டு**
**இருங்களம் ஆர விடத்தை**
**இன்னமு துண்ணிய ஈசர்**

(சம்பந்தர்)

-ஆசிரியர்

❖❖❖ ❖❖❖ ❖❖❖

## வாகீச கலாநிதி. கி. வா. ஜெகநாதன் ஐயா

சைவத்தின் காவலனாக விளங்கி, அருந்தமிழ் ஆன்மிக உரைகளால் பல்லாயிரம் மக்களை ஆற்றுப்படுத்திய பண்பாளன் கி. வா. ஐயாவின் நூற்றாண்டு விழா குறித்து வணங்குகிறோம். உலகம் முழுவதும் கி. வா. ஐயாவின் நூற்றாண்டு விழா இவ்வாண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

❄❄❄ ❄❄❄ ❄❄❄

## வருக வருக புத்தாண்டே

*வருக வருக புத்தாண்டே*
*வையகம் சிறக்க வருகவே*
*வாழ்க்கை வளமுடன் சிறக்கவே*
*வாழிய வாழிய புத்தாண்டே*

*மனதில் மகிழ்ச்சி பொங்கவே*
*பொங்கல் பொங்கி வரவேற்போம்*
*சிற்றுண்டி பலகாரம் பகிர்ந்துண்டு*
*சிறப்புடன் நாமும் வாழ்வோமே.*

ஆக்கம்:-
செல்வி கிருஸ்ணசாமி. துர்க்காம்பிகை
மாவிட்டபுரம்

## புதிய வருடம்

புதிய வருடம் பிறக்குதுவே
புதுமைகள் பலவும் சேர்ந்திடவே
வாழ்த்துச் சொல்லி வரவேற்போம்
வாழ்க வாழ்க பல்லாண்டே

அன்பு நிறைந்த ஆண்டாக
அனைவர் உள்ளத்திலும் வருவாயே
பலரும் சேர்ந்து மகிழ்ந்திடவே
பணிவாய் நீயும் வருவாயே.

ஆக்கம்:- கிருஸ்ணசாமி துளசிகரன்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநிதி பதுமநிதி.

கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

உலகத்திலே பெருஞ் செல்வந்தர்களை இலட்சாதிபதிகள் என்று சொல்லுவார்கள். இலட்சாதிபதிகளுக்கு மேம்பட்ட செல்வர்களைக் கோடீஸ்வரர்கள் என்று கூறுவர். நவகோடி நாராயணர்களைப் பற்றிக் கதைகளிலே கேட்டிருக்கிறோம். அவர்களைப் பார்த்ததில்லை. கோடீஸ்வரர்கள் இடத்திலும் சங்கநிதி பதுமநிதிகள் இல்லை. சங்கநிதியும் பதுமநிதியும் கோடி என்னும் தொகைக்கு மேல் பெரிய தொகையை உடையவை.

சங்கம் என்றால் என்ன? பதுமம் என்றால் என்ன? சங்கம் என்றால் சங்கு. பதுமம் என்றால் தாமரைப்பூ என்று அர்த்தம் சொல்லி விடலாம். ஆனால் கணக்கிலே இவற்றின் மதிப்பு என்ன? சங்கு என்பது கோடி கோடி மதிப்புடையது. அதாவது ஒரு கோடி, பத்துக் கோடி. நூறு கோடி, ஆயிரம் கோடி. இலட்சம் கோடி, பத்து இலட்சம் கோடி சங்கு என்னும் எண்களையுடையது. இந்த எண் பதினைந்து ஸ்தானங்களை யுடையது. இதை இவ்வாறு எழுத வேண்டும். 100, 000, 000, 000, 000. இவ்வளவு பெருந் தொகையுள்ள செல்வத்துக்குச் சங்கநிதி என்று பெயர் சூட்டினார்கள். இதற்கு அடையாள உருவம் "வலம்புரிச் சங்கு."

பதுமம் என்பது சங்கத்தை விட மிகப்பெருந் தொகையுடையது. பதுமம் என்பது கோடி+கோடி+கோடி+கோடி+கோடி என்னும் தொகையைக் கொண்டது. இந்த எண் முப்பத்தாறு ஸ்தானங்களைக் கொண்டது.

நிதிகளாகிய செல்வங்கள் உயிரற்ற சடப்பொருட்கள். அவற்றிற்கு உயிருள்ள ஒரு தலைவன் வேண்டும். நிதிகளுக்குத் தலைவன் குபேரன். குபேரன் மானிடன் அல்லன். தெய்வ புருஷன். நிதிகளுக்குத் தலைவனாகிய குபேரனிடத்திலே சங்கநிதி பதுமநிதிகள் ஏராளமாக உள்ளன. படத்திலே காட்டப்பட்ட உருவங்களைப் பாருங்கள். குபேரன் குறுகிய உடம்பு பருத்த தொந்தியும் உடையவனாய்க் காட்சியளிக்கிறான். கழுத்தில் நவரத்தினமாலை, வயிற்றில் உதர பந்தம், மார்பிலே பூநூல், இவை எல்லாம் முத்தும், மாணிக்கமும், தங்கமுமாக விளங்குகின்றன. செல்வச் செருக்கில் இறுமாந்து மகிழும் முகபாவம்.

அடுத்த படத்தில் இருப்பது பதுமநிதி. குபேரன் பதுமநிதிகளுக்கு அருகிலே அமர்ந்து உவகையோடு இருக்கிறான். குபேர சம்பத்தை அளவிட முடியாது. அவனுடைய மாளிகையைச் சூழ்ந்துள்ள தோட்டத்திலே பெரிய குளம் உண்டு. அதிலே சங்கநிதியும் பதுமநிதியும் படர்ந்து வளர்ந்து காய்த்துக் கொள்கின்றனவாம்.

இவ்வாறு காவியப் புலவர்கள் கற்பனை செய்கிறார்கள். திருவாங்கூரைச் சேர்ந்த பதுமநாப புரத்து அரண்மனைச் சுவரிலே இதுபோன்ற ஓவியம் வரையப் பட்டிருக்கிறது.

சங்கநிதி பதுமநிதிகளுடன் குபேரன் அமர்ந்திருப்பது போன்ற சிற்ப உருவங்கள் சில கோவில்களிலே காணப்படுகின்றன. திருவாரூருக்குக் கிழக்கே ஏழு மைல்களுக் கப்பால் உள்ள கீழ்வேளூர் கோவிலிலே குபேரனுக்கென்று தனிக்கோவில் உண்டு. குபேரனாக இருந்தாலும் அவனுடைய பொருட்செல்வங்கள் எல்லாம் கடவுளின் அருட்செல்வத்துக்கு இணையாகா என்பதைக் காட்டுவதற்குத்தான் திருக்கோவில்களின் வெளியே வாயிற் புறங்களில் காணப்படுகிற சங்கநிதி பதுமநிதிகளின் உருவங்கள் உள்ளன. பெருநிதிகளாகிய பொருட்செல்வங்கள் எல்லாம் கடவுளின் அருட் செல்வத்துக்கு இணையாகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கையிலே மன அமைதி, மனச் சாந்தி என்னும் பேறு கிடைத்தற் கரிய பேறு. செல்வமும் நிதிகளும் மட்டும் மனச்சாந்தியளிக்கா. மன அமைதியைப் பெறுவதற்குக் கடவுளின் கருணாநிதியைப் பெற வேண்டும். சங்கநிதி பதுமநிதிகளைப் பெற்றிருந்தும் மன அமைதி பெறாத குபேரன் கடவுளின் கருணாநிதியைப் பெறுவதற்கு கோவிலின் கோபுரவாசலில் காத்திருக்கிறான்.

செல்வம் - பொருட்செல்வம் சிறந்தது. வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஆனால் அது மட்டும் போதாது - மன அமைதி. மனச்சாந்தி என்னும் சீரிய செல்வத்தைச் செல்வம் தந்திடாது. அதைத் தருவது கடவுளின் கருணாநிதியே. இதையறிந்த பெரியவர்கள் கடவுளை வணங்கி 'நின்' கருணை நிதி வேண்டும் என்று வேண்டினார்கள்.

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லராகில்"...

என்று விளக்கிக் கூறினார் அப்பர் பெருமான். இப்போது சொல்லுங்கள் பொருட் செல்வமாகிய நிதி வேண்டுமா? அருட்செல்வமாகிய கடவுளின் கருணாநிதி வேண்டுமா? இரண்டு நிதிகளும் வாழ்க்கைக்கு மிகமிக அவசியமானவையே. இரண்டு நிதிகளும் தேவைதான்! அதைப் பெற நாமும் முயலுவோமாக.

❖❖❖ ❖❖❖ ❖❖❖

## தோன்றும் நாளை காணுவீர்

கண்டு கொண்டு விட்டோம்
கந்தன் திருமுகம் தன்னையே
பண்டு தொட்டு எங்களைப்
பாது காக்கும் தலைவனை
உண்டு கந்தன் பேரருள்
உண்மை யாக நம்புவோம்
தொண்டு செய்த பயனது
தோன்றும் நாளை காணுவீர்

## சைவ சித்தாந்தம்

தானே அறிவான் இறைவன்
தாங்கும் இந்த உலகம்
ஆன உயிர்கள் அனைத்தும்
அறிவிக் கவறியும் பொருள்களாம்
காணும் முப்பொருள் அநாதியாம்
கடவுள் தலைவன் பசுபாசம்
பேணும் முடிபே சித்தாந்தம்
பெரியோர் வகுத்த கோட்பாடு

வ. யோகானந்தசிவம்.

## கார்த்திகைக் குமரா! தாள்கள் பணிகின்றோம்.

ஜய ஜய முருகா, ஜய ஜய முருகா,
ஜய ஜய முருகா, ஜய ஜய முருகா,

கந்தா முருகா, கதிர் வேலா
கலியுக வரதா, காத்திட வா
துன்பங்கள் துயர்களில், வள்ளி மணாளா
துவண்டு நிற்போரைத் தேற்றிட வா
தேவமகள் வரித்த, வடிவேலா
தேடியுனைப் பாடுகிறோம் மயில்மீதில் வா

கருணையின் உருவே காத்திகைக் குமரா
இருள்தனைப் போக்கிட எழுந்தே வா
தேவர்கள் துயரினைத் தீர்த்திட்ட நாதா
தாள்கள் பணிகின்றோம் நமக்காய் வா
அப்பா முருகா ஆறுமுக சுவாமி
அழைத்து நிற்போர்க்கு அருளிட வா.
(ஜய ஜய முருகா)

மீசாலையூர் கமலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று புதிதாய்ப் பிறந்தோம்.

திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்

பொருள் புதிது, சொல் புதிது, கவி புதிது, சுவை புதிது எனப்பாடிய பெருங்கவி பாரதி. இவ்வழி வந்த தாசனாரும் புதியதோர் உலகம் செய்வோம் போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போமெனப் பாடினார். புதுமை இல்லாத பழமையும், பழமை கலவாத புதுமையும் மனித இனத்தால் எடுபடாது. இன்று இவ்வுலகத்தைக் கண்ணோடின் விஞ்ஞானம் பல புதுமைகளைப் படைத்துளது. அண்ட வெளியில் உயரப்போன செய்திகள், புதியபல கண்டு பிடிப்புக்கள், எதிர்பாராத சவால்களுக்கு முகம் கொடுத்தல், ஆக்கத்திறன்கள் மனிதாய நலனைப் பேணும் ஆய்வுகள், வைத்திய சேவைகள், அண்ட வெளிப்பயணங்கள் விஞ்ஞான மயமாக்கப்பட்டன. தொலைத் தொடர்பு சாதனங்கள், படப்பிடிப்புகள், கணனிகள் தினந்தினம் புதிதாய் வளர்கின்றன. மனிதனை, மனிதத்தையே மாற்றியமைக்க புனர்நிர்மாணஞ் செய்யும் சிந்தனையால் மனிதம் ஆக்கப்பட்டுள்ளது எனப்பேசுகின்றனர். இது பற்றிக் கருத்துப் பின்வருமாறு,

உலகில் மிகப்பெரிய அதிசயமே மனிதன்தான். படைப்பாற்றல் உள்ள ஒருவர் மிகவும் அதிசயத்துக்குரியவர். ஆக்கபூர்வமான சிந்தனையாளர்களே படைப்பாற்றல் பெறுகின்றனர் என்பதே உண்மையாகும். பழைய எண்ணங்களையும் பயன்படாத எண்ணங்களையும் அடியோடு அப்புறப்படுத்தி விட்டு, புதிய எண்ணங்களால் மனத்தினை நிரப்பும் போது படைப்புத்திறன் கூடுகிறது. சமுதாயத்தில் நிலவுகிற தோல்வி மனப்பான்மையினை தொலைவில் நிறுத்தி வைக்கிற சக்தி ஆக்கபூர்வ சிந்தனைக்கு மட்டுமே வெற்றி பெறுகிறார் என்பதே யதார்த்தமானது எம்மைச் சுற்றியுள்ள தெரிந்த சூழ்நிலையில் புதியகண்டு பிடிப்புக்களைச் செய்யும் போது படைப்பாற்றல் பிறக்கிறது.

சிந்தனைப் பூக்கள் பத்மநாதன். பழைமைச் சேற்றிலே குளித்த ஒரு சமுதாயத்தை புத்தம் புதியவர்களாக மாற்றிய உலகச் சிற்பிகள் பலர். காலத்திற்குக் காலம் இப்படியான ஆக்கத்திறனாளரின் சிந்தனைகள் மனித பரம்பரையையே திசைதிருப்பி மாற்றியமைத்தது. அந்த வரிசையிலே ஒருவர்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். ஒரு புரட்சியாளனாக, சிந்தனையாளனாக, மறுமலர்ச்சியாளனாக, படைப்பாக்கத்திறமையாளனாக, அதந்தர புருடனாக எல்லாம் அவர் மதிக்கப்பட்டார். அவரின் அடிநாதமான, ஆதார சுருதியான சிந்தனைக்கருவூலங்களே அவர் தந்த பாட்டும், எழுத்தும். மனிதகுலம் தன் பெலம் தனக்குப் புரியாமல் - முன்னேற்றமின்றி வாழ்ந்த காலகட்டத்தை உன்னிப்பாய்க் கண்ட தீவிரவாதியான அவரின் கவிதை வடிவம் தந்த எழுச்சிமிகு தொடர்தான் இவ்வாக்கத்தின் மகுடம்.

**சென்றதினி மீளாது மூடரே! நீர்**
**எப்போதும் சென்றதையே சிந்தை செய்து**
**கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து**
**குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்**
**இன்று புதி தாய்ப்பிறந்தோம் என்று நீவீர்**
**எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு**
**தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்**
**தீமையெலாம் அழிந்து போம், திரும்பிவாரா**

வேதாந்தப் பாடல் 20 சென்றது...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலின் நடைமுறைச் சித்தாந்தத்தை இலகுதமிழில் தெளிவுடன் வெளிக் கொணர்ந்த இப்பாடல் படிப்பவர்களைச் சிந்திக்க வைக்கிறது. கவலையில்லாத மனிதனைக் காணமுடியாது. கறையான் மரத்தை அரித்து வேருடனே நிர்மூலம் செய்வது போன்றே கவலை யென்கின்ற அரிவாள் மனிதத்தையே வேதனையில் ஆழ்த்தி விடுகின்றது. கவலை இல்லாதவன் சிவலை என்பர். சிவலை எனின் சிவன் என்று பொருள். மனித அனுங்கல்கள் கடவுளின் செவிக்குக் கேளாமல் இல்லை. இந்தக் கூப்பாடுகள் அவனையும் கல்லாக்கிவிடலாம். கல்லாய்ப்போன மனித மனத்தாலேதான் கடவுளும் கல்லாய் போனான் என்கிறார் கண்ணதாசன். எத்தனை விதமான கவலைகள். பணம் உள்ளவனுக்குச் சாப்பிடமுடியவில்லை. பசியுள்ளவனுக்குப் பருக்கைக்கு வழியில்லை. நோய் உள்ளவன் மனம் நொடிந்து போகின்றான். நல்லவனுக்குக் காலமில்லை. பொல்லாதவன் எப்படியோ வாழ்கிறான். கடந்த காலம் இனித்திரும்பி வராது. போனது போனதுதான். ஆக நம்மைப் பின்னிய வலைப்பின்னலை முடிந்து போன சம்பவங்களை நினைந்து நினைந்து கவலைக் கடலில் மூழ்காதே. போன காலம் திரும்பி வராது. ஆகவே சென்ற கால நினைவுகளை, சம்பவங்களை துன்பங்களை மீளவும் அசைமீட்டு என்ன இலாபமும் பிரயோசனமும் இல்லை. போனது போனதுதான். நல்லதோ பொல்லாதது. சென்றவற்றை நினைந்து நினைந்து அப்படுகுழியில் வீழ்ந்து அதோடு மாரடியாதே. போனதை விட்டு புதியனவற்றை சிந்திப்பாயாக . அதற்கு என்ன வழி. இன்று தான் பிறந்தேன் என புதிய பாதையில் நின்னை இட்டுச்செல். ஆக இனி எம் செயற்பாட்டால் ஆக்கங்கள் விளைய வேண்டும். புத்தூக்கம் வரவேண்டும். ஆகவே பழைய சேற்றில் குமையாமல் புத்தம் புதிய எண்ணங்களால் நின் மனதை நிறைத்து சாப்பிட்டு, விளையாடி உன் வாழ்வைப் புதுமையாக்கு. அப்படி வாழ்வாயானாற் தீமையெல்லாம் தீயினிற் சாகும். எதற்கும் அஞ்சாதே. முன்னோக்கி நின்னை வழிநடத்திச் செல் என்கிறார் புதுமைப்பாரதி. குழந்தையுள்ளம் வெள்ளையுள்ளம். மனதை துன்பச் சூழலினின்று விடுபட பழைய குப்பைகளை குழி தோண்டிப்புதை. நீ நிட்சயம் நிம்மதியாய் வாழ்வாய் என்பது பாரதி காட்டும் புதிய பாதை. இனியேனுஞ் சிந்திப்போம். இத்துடன் நிறுத்தவில்லைப் பாரதி எதையும் மனதிலே போட்டு அலட்டுவதால் எப்பயனும் இல்லை எனத் தட்டியெழுப்புகின்றார் எம்மை. துன்பம் வருங்கால் நகுக என்ற வள்ளுவன் வாய்மொழியையும் நாம் மறக்கலாமா.

**இன்னுமொரு முறை சொல்வேன் பேதை நெஞ்சே!**
**எதற்கும்மினி உளைவதிலே பயனொன்றில்லை**
**முன்னம் நம திச்சையினாற் பிறந்தோ மில்லை**
**முதலிறுதி இடைநமது வசத்தில் இல்லை**
**மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே**
**வையகத்தில் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்!**
**பின்னையொரு கவலையுமிங்கில்லை, நாளும்**
**பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்**

27 பேதை நெஞ்சே

குழந்தைக்கும், இளவயதினர்க்கும் அவர்களை மேதகுவழியில் நெறிப்படுத்த பன்னாற்றானும் முயன்றும் பயன் காணா நிலையில் சரி கடைசி முறையாக ஒருதரம் சொல்லிப்பார்ப்போம் எனப் பெற்றோர் நினைப்பது போன்று கவிஞரும் இன்னுமொருமுறை சொல்வேன் என்கிறார். அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பார். அ∴தே போல மூடமனத்தைப் பேதை நெஞ்சேயென விளித்துப் பேசுகின்றார். எதற்காகவும் நீ தொடர்ந்து உளையாதே. அதனாற் பயனில்லை. எம் பிறப்பு எம் இச்சையால் விருப்பால் வந்தது அன்று. நாம் எண்ணியபடி எதுவும் நடக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் இயக்கமே என நினைந்து மனசை வீணாய் அலட்டாதே என்பது கவிவாக்கு. நெடுந்தூரம் தான் நினைந்து துஞ்சுவதே மாந்தர் தொழில் என்பது மூதாட்டி வாக்கு.

எனவே இந்தச் சபல புத்தியுள்ள மனிதனை நோட்டம் விட்ட பாரதியார் நிலைதடுமாறும் மனிதத்தை பார்த்துப் பேசுகின்றார்.

**நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த**
**நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்**
**அஞ்சி யஞ்சி சாவார் - இவர்**
**அஞ்சாத பொருளில்லை அவனியிலே**
**வஞ்சனைப் பேய்கள் என்பார் - இந்த**
**மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்**
**துஞ்சுது முகட்டில் என்பார் - மகத்**
**துயர்ப் படுவார், எண்ணிப் பயப்படுவார்.**
**(நெஞ்சு)**

**நெஞ்சு பொறுக்கு திலையே - இதை**
**நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே**
**கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்**
**காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்**
**பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்**
**பரிதவித் தேவுயிர் துடிதுடித்துத்**
**துஞ்சி மடிகின்றாரே - இவர்**
**துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே**
**(நெஞ்சு)**

தேசீயகீதங்கள் **15 = 1 - 6**

மனித சமுதாய அனுங்கல், முனகல் பற்றி எழுந்த இப்பாடலிலே நம்நாட்டு நிலைப்பாடு பேசப்படுகின்றது. இன்றும் அஃது தீர்ந்த பாடில்லை. தமிழச் சமுதாயம் மலேனியம் கண்டும் மாற்றம் காண முனையவில்லையே. ஒருமாற்றம் ஏற்பட்டாற்றான் ஏற்றம் கிடைக்கும். இன்றைய கெடுபிடிகளினின்றும் விடுபட நல்ல சிந்தனைகள் தேவையன்றோ. எனவே ஒளிமயமான எதிர்காலம் ஒன்று படைக்க நல்ல சிற்பிகள் தேவை.

இந்த மனித இயற்கோளாறுதனை எண்ணிப்பார்க்கிறார் பாரதி. அவரின் தாகம் தீர்ந்து விடவில்லை. எனவே வேடிக்கை மனிதரையும், தன்னையும் ஒப்பிட்ட வேளை குமுறியெழுந்தார். வெறும் சோத்து மாடுகளல்ல நாம் என்பதை உணர்த்துகிறார்.

**தேடிச் சோறு நிதந் தின்று - பல**
**சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்**
**வாடித் துன்பமிக உழன்று - பிறர்**
**வாடப் பல தொழில்கள் செய்து - நரை**
**கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்**
**கூற்றுக்கிரை யெனப்பின் மாயும் - பல**
**வேடிக்கை மனிதரைப் போலே - நான்**
**வீழ்வே னென்று நினைத்தாயோ?**

32 யோகசித்தி 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாழ்வு வேடிக்கை வினோதத்துக்குரியதுஅன்று. றொம்பப் பொருளுண்மை நிறைந்தது. ஒரு சாண் வயிற்றுக்காக உழைத்து. அற்பத்தனமான கதைகளை அளந்து கொட்டி வாடி வருந்திக் கவலையில் உழன்று மற்றவர்கள் துன்பமுறக் கூடிய கருமங்களையாற்றி இறுதியில் இறந்து போவதா வாழ்வு. இல்லையில்லை அது வாழ்வன்று. அந்த மனிதப் பதர்களைப் போலே நான் வீழ்ச்சிஅடைவேனென்று சக்திக்கே சவால் விடும் பாவத்தில் எழுச்சிமிகு கவிதையாத்த பாரதி ஒரு புது வார்ப்பும் செய்தார்.

**நின்னைச்சில வரங்கள் கேட்டேன் - அவை**
**நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்**
**முன்னைத் தீவினைப் பயன்கள் - இன்னும்**
**மூளா தழித்திடுதல் வேண்டும் - இனி**
**என்னைப் புதிய வுயிராக்கி - எனக்**
**கேதும் கவலையறச் செய்து - மதி**
**தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்**
**சந்தோசங் கொண்டிருக்கச் செய்வாய்** மேலது 5

கருதிக் கருதிக் கவலைக் கடலில் வீழாமல் இன்று புதிதாய்ப் பிறந்தோம் எனும் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு ஒரு வாழ்வுக்கு வகை சமைத்த கவிஞர். இக்கவிதையிலே என்னைப் புதியவராக்கி எனக்கேதும் கவலையுறச் செய்து மனத் தெளிவோடு கருமங்களையாற்ற பாட்டையமைத்த புதுமைப் புலவர் என்றும் மகிழ்ச்சியுடன் வாழ அருள் வேண்டுகிறார் சக்தியிடம்.

கலக மானிடப் பூச்சிகளாய்க் கண்ட மனித நோக்கு நாளும் பொழுதும் கவலையில் அழுந்தும் புனிதமற்ற வாழ்வையும் உரைத்துப் பார்க்கவே செய்கிறது. உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம் எண்பது கோடி நினைந் தெண்ணுவன (நல்வழி 26) என தமிழ் மூதாட்டி பாடினார். ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப - கோடியுமல்ல பிற என்பது வள்ளுவர் வாக்கு. இப்பேராசைக்கு பேரெண்ணேயில்லை. மனிதம் படும் கவலையை - நாளும் எண்ணிரண்டு கோடியிலும் மிகப் பலவாம். வீண்கவலை எளியனேற்கே என எழுதி வைத்த ( கோவிந்தன் பாட்டு - 1) பாரதியின் சிந்தனைகள் எல்லார்க்கும் பொது உடமைதான். மதுரகவி (பிள்ளைப் பெருமாளையங்கார்) கவலையை விட்டு அன்று பிறந்த பசுக்கன்று போலத் துள்ளிக் குதித்து வாழ் எனப்பாடியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மனமே அடிப்படை. எனவே மனத்தை பண்டுத்தி ஒரு தேட்டம் காண் என்கிறது தாயுமானவர் பாடலொன்று.

**கார் ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து அறக்**
**கண்டு, அகங்காரம் என்னும்**
**கல்லைப் பிளந்து, நெஞ்சு அகமான பூமிவெளி**
**காணத் திருத்தி, மேன் மேல்**
**பார் ஆதி அறியாத மோனம் ஆம் வித்தைப்**
**பதித்து, அன்பு நீர் ஆகவே**
**பாய்ச்சி, அது பயிர் ஆகும் மட்டும்மா மாயைவன்**
**பறவை அவ்வகா தவண்ணம்**
**நேராக நின்று, விளைபோகம் புசித்து உய்ந்த**
**நின் அன்பர் கூட்டம் எய்த,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின் அருள் பாரம் என்றும்
ஆர் ஆரும் அறியாத சூதான வெளியில் வெளி
ஆகின்றது ரியமயமே
அண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறைவு ஆகி
ஆனந்தம் ஆனபரமே. ஆனந்தமானபரம் 6

பார் ஆதி - மண்ணுலகத்தவர் முதலானோர் மாமாயை கடப்பதற்கரிய உலக வாழ்வு, அன்பர் கூட்டம் எய்த - சத்சங்கத்தையடைய, சூதான வெளியில் கட்புலன் ஆகாத ஞானவெளியில் துரிய மயமே - பரமாத்ம வடிவமே, கார் - இருள், அறக்கண்டு வெட்ட வெளியாக்கி, வெளிகாண வெளி காணும் படி நம் கவலை கடிய வழி காண்போம். மனம் போலவே வாக்கு. இவ்வுலக வாழ்வினம்பாலேயும் ஓர் ஆன்மீக வாழ்வு காண வேண்டியது மனிதம்.

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா
நேற்றுத் தோன்றியவை என்பதால் தீதாகா"
உமாபதிசிவம் - சிவப்பிரகாசம்

❖❖❖ ❖❖❖ ❖❖❖

## மார்கழியின் பண்பாடும் மகிமையுறு காலம்

பனிதானும் இலைமீதில் சித்திரங்கள் தீட்டி
பவனிவரும் மார்கழியின் இதம்சொல்லும் வேளை
இனிதெனவே அரிவையரும் உதயன்முகம் காண
இமைதிறந்து கோலமிட்டு இதயவொலி மீட்டி
கனியமுதக் கண்ணன்புகழ் பாடிமகிழ் திங்கள்
கவின்பாவை மொழியின்சுவை திசையெட்டும்பரவ
புனிதரென எழுந்துவரும் எங்கள்குல மகளீர்
புகழும்திரு வெம்பாவை பாடிமகிழ் காலம்

அன்றுதிரு மாலுடனே பிரமனுமே கூடி
அடிமுடிகள் தேடிவரக் கூட்டியதோர் தீயும்
நன்றுபெற வான்முதலாம் பாதாளம் மீதும்
நளினமுற எழுந்துசுடர் வடிவமிகு கொண்ட
அண்ணாம லையுடையான் அடியிணைகள் போற்றி
அழகுமணி வாசகரும் பாடுதிரு வெம்பா
எண்ணிமகிழ் கன்னியர்தம் எண்ணம்நிறை வேற
ஏழிசையின் சுவைகூட்டிப் பாடிமகிழ் காலம்

காலமெல்லாம் துயின்றுமனச் சோர்வுடனே நாளும்
காரியங்கள் ஆற்றியதோர் நிலைமறந்து இன்றும்
சாலநறும் மலர்தொடுத்துக் கன்னியர்கள் கூடி
சந்திரனை முடியினிடைத் தரித்தபிறை யாளன்
நீலமணி மிடறுடையான் தேவியுமை யோடும்
நித்தமொளி செய்கோலம் கண்டுகரங் கூப்பி
இலங்குமவள் வாழ்விலொளி சூழ்ந்திடவே செய்யும்
இன்னருளை வேண்டித்துதி பாடிவரும் காலம்

கொட்டும்பனிக் கோலமதில் சிந்தையெழில் கொளுச
கோகுலனை கோதையுமை நாதனையும் நெஞ்சில்
இட்டமுடன் வேண்டியிரு கைதொழுது பணிய
இனியதிரு நாளிதுவே என்றுகளி கொண்டு
வாட்டமிகு போக்கியுயர் வனப்பினையே நாட்டி
வாலையர்கள் இசையோடும் இறைபுகழைப் பாட
நாட்டமுடன் சென்றழகுப் பண்பாடும் பொழுதில்
நாட்டினிலே புத்துணர்வு பொங்கிவரும் உறுதி.

சு. குகதேவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

## 17. மாணிக்கம் விற்ற கதை.

வீரபாண்டியனுக்குக் காமக்கிழத்தியரிடையே தீய குணமுடைய பல புதல்வர்கள் பிறந்தார்கள். ஆனால் குலபத்தினிக்குப் புதல்வர்கள் பிறப்பதற்காக வீரபாண்டியனும், குலபத்தினியும் அட்டமி சதுர்த்தசி, சோமவார விரதங்களை அனுட்டித்து வந்தார்கள். அப்படி இருக்கும் காலத்தில் குலபத்தினிக்கு ஓர் ஆண் குழந்தை கிடைத்தது.

அந்தக் குழந்தை பிறந்து ஐந்து வயது நடக்கும் போது வீரபாண்டியன் காட்டிற்கு வேட்டையாடச் சென்று புலியினால் கொல்லப்பட்டு இறந்து விட்டான். இதனையறிந்த காமக்கிழத்தியரின் புதல்வர்கள் திரவியசாலையிலுள்ள திரவியங்களையும், அரசனின் மணிமுடியையும் கவர்ந்து மறைத்து விட்டனர். அரசன் இறந்த செய்தி அறிந்த நகரத்தார் பின்னர் அரசனின் ஈமக்கிரியைகளை மந்திரிமார் செய்து முடித்தனர்.

வீரபாண்டியன் குலபத்தினியின் புதல்வனுக்கு முடி சூட்ட எண்ணிய மந்திரிகள் அரசனின் கீரீடம் ஆபரணங்கள் முதல் திரவியசாலையிலுள்ள திரவியம் எதுவும் காணாது திகைத்தார்கள். வேறுமுடி செய்யத்திரவியமோ உயர்ந்த இரத்தினங்களோ இல்லை அரசாட்சி செய்ய அரசனில்லாவிட்டால் நாடு பெருந் துன்பமடையுமென ஆலோசித்து சோமசுந்தரக் கடவுளுடைய திருவருளை நினைந்து, இராச புத்திரனை அழைத்துக் கொண்டு திருக்கோயில் திருகோபுரத்தின்முன் சென்றார்கள். அப்போது சோமசுந்தரக் கடவுள், இரத்தினம் முதலிய மாணிக்கக்கல் பொதியொன்றைச் சுமந்து வணிகர் போல அவர்கள் முன் தோன்றினார்.

வணிகர் எதிரே வருபவர்களை நோக்கி "நீங்கள் கவலையுடன் வருவதென்ன? என்று வினாவினார். மந்திரிமார்கள் தமக்குண்டான கவலைகளை விளக்கமாகச் சிவபெருமானாகிய வணிகருக்குக் கூறினார்கள். அதனை கேட்ட சிவபெருமானாகிய வணிகர் திருவுளமிரங்கி, "நீங்கள் கவலை ஒழிமின் என்னிடத்தில் பதினாயிரம் கோடி பொன்பெறும் நவரத்தினங்களுண்டு" எனக் கூறினார்.

பின்னர் தமது கரிய துணித்துண்டைக் கீழே வைத்து அவிழ்தார். அதில் பிரகாசமாகக் காணப்பட்ட இரத்தினங்களின் இலக்கணங்களைக் கூறி அவற்றை கிழக்கு வடக்கு நோக்க வைத்து அருச்சனை செய்தனர். பின்னர் கையால் எடுத்துச் சோமசுந்தரர்க் கடவுளைப் பார்த்து, இக்குமாரனுக்கு அளவிறந்த ஆயுளும் செல்வமும் பெருகுக" என்று அவர்களிடம் கொடுத்தருளினார். இராசபுத்திரன் விமானத்தைப் பார்த்து வணங்கி, நிலத்தில் வீழ்ந்து வணங்கினான். பின்னர் எழுந்து இரண்டு கரங்களையும் நீட்டிப் பக்தியுடன் அவ்விரத்தினங்களை வாங்கினான். வைசியர் அரசகுமாரன் மந்திரிகளை நோக்கி, "இவ்விரத்தினங்களால் முடி செய்வித்து இராசகுமாரனுக்குச் சூட்டி அபிடேகம் செய்யுங்கள் என அருளி மறைந்தார்.

இரத்தினத்திற்குரிய பணம் கொடுக்க மந்திரிமார்கள் அங்கு வணிகரைக் காணாது ஆச்சரியம் கொண்டார்கள். வைசியர் தன் திருக்கோலம் காட்டி, உமாதேவியாரோடு திருக்கோவிலுள்ளே மறைந்தருளினார். வணிகராய் வந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானே என்று அவர்பின்னே தொடர்ந்து அரசகுமாரனும் மந்திரிமாரும் சென்றார்கள். அரசகுமாரன் தவ தலத்தில் வீழ்ந்தெழுந்து "எம்பெருமானுக்கு செய்யத்தக்க கைமாறொன்றுண்டோ? என்னுடல் ஆவி பொருள் மூன்றும் எம் பெருமானுடையதே. எனத்துதித்து தனது அரண்மனைக்கு மந்திரிமார்களுடன் சென்றான்.

சிவபெருமான் அருளியபடி அரசகுமாரனுக்கு முடிசூட்டி அபிடேகம் மந்திரிமார்கள் செய்தார்கள். சிறிது நாளின்பின் காமக்கிழத்தியரின் மக்கள் களவாடிய முடி இரத்தினா பரணங்கள், திரவியங்கள் யாவும் அரசகுமாரனிடம் வந்து சேர்ந்தன.

## 18. வருணன் ஏவிய கடலை வற்றச் செய்த கதை.

சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்திரத்தில் அபிடேக பாண்டியன் பக்திசிரத்தையோடு வேதாகம விதிப்படி சோமசுந்தரக் கடவுளுக்கு அபிடேகமும் விசேட பூசையும் செய்தபின் கடவுளை வியந்து நோக்கி, எம்பெருமானே நீர் என் கர்ப்பூர சுந்தரரேயோத என்றான்.

சோமசுந்தரக் கடவுளை வருடந்தோறும் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் பூசிக்கும் தேவேந்திரன், பாண்டியன் பூசை செய்தலைக் கண்டு, அதுமுடியும் வரைக்கும் காலம் தாமதிக்குமளவும் நின்று பின்னர் பூசைசெய்து விட்டுச் சுவர்க்கம் சென்றான்.

அப்போது அங்கு வருணன் வந்தான். அவன் இந்திரனை நோக்கி, "உனது திருமுகம் இன்று வாடியதன் காரணம் யாது? என்று கேட்டான். இந்திரன் சோமசுந்தரக் கடவுளைப் பூசிக்க இன்று காலதாமதமாகியதால் கவலைப்படுகின்றேன்" என்று கூறினான். அப்போது வருணன், "அச்சிவலிங்கம் மகாலிங்கமோ" என்று கேட்டான் இந்திரன். அச்சிவலிங்கம் முன்னே என்னுடைய பிரமகத்தி தோஷத்தையும், வெள்ளியானையின் சாபத்தையும் நீக்கியமை நீ அறியீா போலும்" என்று கூறினான்.

"அப்படியாயின் தேவருடைய மருந்துகளால் தீர்க்க முடியாத என் வயிற்று நோயை அச்சிவலிங்கம் தீர்த்தருளுமா"? என்று கேட்டான். நீ முயன்றுபார் என இந்திரன் கூறினான்.

வருணன் "நான் வரும்போது காமதேனுவும் அதன் கன்றும் எதிர்ப்பட்டன. இதுவே நல்ல சகுனமாகும். இந்த நல்ல வார்த்தையும் கேட்டேன்". என்று கூறிக்கொண்டான். பின்னர் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளி இருக்கின்ற மதுரைமாநகர் சென்று, தனது வயிற்று நோய் தீர்க்க நினைத்து சமுத்திரத்தை அழைத்து நீ இந்த மதுரை முழுவதையும் அழிக்கக்கடவாய்" என்று ஏவினான்.

உடனே சமுத்திரம் கொதித்தெழுந்து ஊழிக்காலம் போல மலைகள், மரங்கள், வீடுகள் யாவற்றையும் பிடுங்கி எறிந்து பிரளய காலம்போல் பெருகியது. இதனைக் கண்ட தேவர் முதலாக மக்களும், மதுரைமா நகரமும் "குய்யோ! முறையோ"! பேருழிக்காலமோ என்று கலங்கினார்கள். அபிடேக பாண்டியன் நடுநடுங்கி சிவபெருமானுக்கு முறையிட்டான். சிவபெருமான் திருப்புன்முறுவல் செய்து, "அஞ்சாதே! அஞ்சாதே! அஞ்சாதே! என்றருளித் தனது சடையிலுள்ள நான்கு மேகங்களை நோக்கி இந்த நகரத்தை அழிக்க வந்த சமுத்திரத்தைச் சுவறும் வண்ணம் நீங்கள் விரைந்து போய் பருகக் கடவீர்" என பணித்தருளினார். மேகங்களும் அவ்வாறே சமுத்திரத்தை உறுஞ்சின. உறிஞ்சுதலும் அச்சமுத்திரம், சிவபெருமானே முழுமுதற் தெய்வம் என்ற தெளிந்த மெய்யன்பகளுடைய எழுபிறவி கடல் போலப் பசையற நன்கு வற்றியது. இதனைக் கண்ட தேவர் முதலானோர் பலதரம் எம்பெருமானைப் புகழ்ந்து பாடினர்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து:-

# அவரைப் போலவே அவனும்....?

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்.

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்துக்கள். எப்படி இருக்கின்றீர்கள்? எல்லோரும் நலமாக வாழப் பிரார்த்தனை. நல்லவற்றைக் கற்று நல்லவற்றையே நினைத்து எல்லோருக்கும் நலனே செய்து வாழப் பழகுவோம். மாணவப் பருவத்தில் அடக்கம் மிக அவசியம். அடக்கம் இல்லாத ஒரு மாணவனுக்கு கிடைத்த அனுபவம் ஒன்றை இன்றைக்குத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு சாது மகான் இருந்தார். குருகுலம் நடத்தி வந்தார். பல இளைஞர்கள் அவரிடம் உயர்ந்த ஆன்மிகக் கல்வியையும், சிறந்த வாழ்க்கைப் பயிற்சியையும் கற்றுக் கொண்டிருந்தனர். சில வேளைகளில் குரு தனது மாணவர்களையும் அழைத்துக் கொண்டு நகரத்து வீதி வழியாகச் செல்வதுண்டு. யாராவது பொருள் படைத்தவர்கள் இந்தச் சாதுக் கூட்டத்திற்கு உடைகளோ, உணவோ கொடுப்பார்கள். அதனைப் பெற்றுக் கொண்டு இவர்கள் குருகுலத்திற்குத் திரும்பி வருவார்கள்.

ஒரு காட்டின் அருகில் அருவியின் பக்கத்தில் அமைந்திருந்த அந்த குருகுலத்தில் வயதான அந்த குருவும், இளஞ்சீடர்களும் கவலையற்று இறை சிந்தனையுடன் தமது ஆன்மீக வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டிருந்தனர். அந்த மாணவ இளைஞர்கள் பல்வேறு பகுதியில் இருந்தும் வந்தவர்கள் என்றாலும் ஒரு குரு- ஓரே மாதிரியான வாழ்க்கைநெறி- சம உணவு- சமமான கல்வி எல்லாம் பெறுபவராய் இருந்தனர். குரு அவர்களிடம் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை. நன்கு கற்றுக் கொள்ளும் மாணவனை முகமலர்ந்து பாராட்டுவார். பலமுறை கற்பித்தும், விளக்கமில்லாமல் சிரமப்படும் மாணவனையும் அதே முகமலர்ச்சியுடன் ஊக்கப்படுத்துவார். அவருடைய மாணவக் கூட்டத்துள் ஒரு மாணவன் கொஞ்சம் கர்வம் படைத்தவனாக இருந்தான். கல்வியிலும் அவன் கெட்டிக்காரன் தான். காலப் போக்கில் தான் குருவுக்கு நிகரானவன், தன்னை நம்பி குரு பல பொறுப்புக்களை ஒப்படைக்கிறார், மற்ற மாணவர்களை விட திறமையும், அறிவும், ஆற்றலும் தனக்கு மிக அதிகம் என அவன் எண்ணிக் கொண்டான். ஏனைய மாணவர்களைச் சமயம் கிடைக்கும் போது மட்டந்தட்டி வைப்பான். குருவும் அவனைச் சிறிது அதிகமாகவே கவனித்துக் கொண்டார். முக்கியமான பொறுப்புக்களை அவனிடமே ஒப்படைத்தார். வல்லசாலியான அவன் பொறுப்புக்களை திறமையாகவே செய்துமுடித்து குருவின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொள்வான். ஏனைய மாணவர்களுக்கு இவனிடத்தில் மிகுந்த பயம். அவன் மட்டந்தட்டும் வேளைகளில் மனதுக்குள் வருந்துவார்கள். வல்லான் வகுத்ததே வழி என நினைத்துக் கொள்வார்கள்.

ஒரு நாள் குரு மாணவர்களை அழைத்துக் கொண்டு நகரத்துக்குப் போனார். நகரத்தில் ஒரு தனவந்தர் (பணக்காரர்) இவர்களைச் சாப்பிட அழைத்தார். பணக்காரருடைய மாளிகையில் குருவுக்குப் பாதபூஜை செய்தார்கள். சீடர்களில் சிறந்த ஒருவருக்கும் பாதபூஜை செய்ய விரும்பினார்கள். குருவோ மௌனமாக இருந்தார். மாணவர்களும் அடக்கமாக ஒதுங்கி இருந்தார்கள். தன்னைப் பெரியவனாக நினைத்துக் கொண்ட சீடன் மாத்திரம் குருவுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தான். அவனுக்கும் முறைப்படி பாதபூஜை செய்து வணங்கினார்கள். உணவுப் பந்தியிலும் குருவுக்கு அருகில் அவனுக்கும் ஆசனமிட்டு உணவு படைத்தார்கள். உணவு உண்டு உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு குருவும் சீடர்களும் வீதியில் நடந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட மாணவனும் தான் குருவுக்குச் சமாமனவன்" என்ற கர்வத்துடன் குருவின் பக்கத்தில் போய்க் கொண்டிருந்தான்.

அவர்கள் கொல்லர் தெருவில் நடந்து கொண்டிருந்தார்கள். இரும்பை உலையில் உருக்கி நெருப்புக் குழம்பு போல ஆக்கி அச்சில் வார்த்து கருவிகளை உருவாக்கும் கம்மாளர்கள் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

"நல்ல விருந்து நிறைய சாப்பிட்டாயிற்று இப்போது நிறையத் தண்ணீர் குடித்தால் நன்றாக இருக்குமல்லவா?" என்று சீடர்களைப் பார்த்துக் கேட்டார் குரு. சீடர்களும் மௌனமாகத் தலையசைத்தார்கள். குருவோடு பூசை ஏற்ற சீடன் மட்டும் "அப்பப்பா! நிறையவே தண்ணீர் குடித்தால் நல்லது." என்றான்.

அருகில் இருந்த ஒரு இரும்பு உலைக்குப் பக்கத்தில் போய் நின்றார் குரு. "அப்பனே இந்தக் குழம்பில் கொஞ்சத்தை வார்த்து விடு" என்று இரு கைகளையும் நீட்டினார். கம்மாளனும் மந்திரத்தால் கட்டுண்டவர் போல உடனே எழுந்து உருகி ஓடிக்கொண்டிருந்த இரும்புக் குழம்பை குவளையில் அள்ளிக்குருவின் கையில் வார்த்தான். குரு மடமடவென்று அதைக் குடித்தார். பக்கத்தில் நின்ற சீடனைக் காட்டி "இவருக்கும் நல்ல தாகம். கொஞ்சம் வார்த்து விடப்பா" என்றார். சீடன் அதிர்ச்சியால் உறைந்து போனான். அடியற்ற மரம் போல குருவின் காலில் விழுந்தான். அழுதான், தொழுதான், குரு மௌனமாக சீடர்கள் பின் தொடர நடந்தார். குறிப்பிட்ட சீடனும் தயங்கித் தயங்கி நடந்தான்.

இதுவரை பயத்தில் கட்டுண்டு இருந்த ஏனைய சீடர்கள் இப்போது தமது குருவின் சீலம்மிக்க அன்பின் மெய்மையில் கட்டுப்பட்டு முன்பைவிடக் குருபக்தி மேலிட்டவர்களாக அடக்கமாகத் தங்கள் குருவைப் பின்தொடர்ந்தார்கள்.

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.** குறள்.

❋❋❋ ❋❋❋ ❋❋❋


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**

தொடர்புகளுக்கு:
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

கண் வைத்திய நிபுணர்கள்:
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr . சிவந்தா, 021-222 3149**
யாழ், போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிந்துருகும் அடியார்க்கு கருணை கொடுக்கும் தாந்தாமலை முருகன் ஆலயம்.

கே. எம். வாசகர் அவர்கள் கன்னன்குடா.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான். தாந்தாமலைக்குச் சென்றால் குமரன் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு மகிழலாம். கசிந்து உருகும் அடியார்களுக்கு கேட்டதும் 'இந்தா' என்று கை நிறைய கொடுக்கும் முருகன் தான், தாந்தாமலை முருகன்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிற்கு மேற்கில் படுவான் கரைப்பகுதியில், அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் ஏறக்குறைய ஐந்நூறு அடி உயரத்தில் உள்ள சிறு மலை இது தான் தாந்தாமலை. தாந்தாமலைக்கு மண்முனை துறையை கடந்து கொக்கட்டிச் சோலை - மணற் பிட்டி வழியாக மேற்கே 12 மைல்தூரம் செல்ல வேண்டும். இதைவிட பட்டிருப்புப் பாலம் வழியாகவும் வலையிறவு பாலம் வழியாகவும் தாந்தாமலைக்கு செல்ல முடியும். மேற்கே செல்லும் போது அடர்ந்த காடுகளின் மத்தியில் மலைத் தொடர்களை காணமுடியும். தாந்தாமலை பன் நெடுங்காலமாகப் படுவான்கரை பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் விசுவாசமான வழிபாட்டு இடமாக இருந்து வருகிறது. மழையில்லாத காலத்தில் தாந்தாமலைக்குச் சென்று பொங்கல் வைத்து பூசை செய்வது வழக்கம். தற்போது மலை உச்சியில் பிள்ளையார் ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கு இடது பக்கம் சுமார் 15அடி தூரத்தில் 5அடி உயரமான ஒரு மரம் நிற்கிறது. அந்த மரத்தடியில் தான் ஆதிகாலம் தொடக்கம் பொங்கல் வைத்து வழிபாடு செய்ததும் மழை பெய்யும். இந்த வழிபாடு படுவான்கரைப் பகுதி மக்களால் இன்றும் நடைபெற்று வருகிறது. அந்த மரம் தற்போது காணப்படும் உயரத்திலும், தோற்றத்திலும் பல நூறு வருடங்களாக காட்சி தருகிறது.

1956ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்புதான் தாந்தா மலையின் பிரசித்தி திக்கெட்டும் பரவியது. அவ்வருடம் ஆடித்தீத்தத்திற்கு அடியார்கள் கதிர்மாமம் செல்ல முடியாது தவித்தனர். இதனை உணர்ந்த தமிழ்கடவுள் முருகப் பெருமான் கொக்கட்டிச் சோலை பிரதேசத்தில் மூனைக்காடு கிராமத்தை சேர்ந்த திரு.க. பாலிப்போடி வைத்தியர் அவர்களின் சொற்பனத்தில் தோன்றி, 'தாந்தாமலையில் தான் குடிகொண்டிருப்பதாகவும், அடியார்களுக்கு அவ்வருடம் ஆடித் தீர்த்த உற்சவத்தை நடத்தும்படியும் தனது இருப்பிடம் அடர்ந்த காடுகளால் மறைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். இதனை உணர்ந்த பாலிப்போடி அவர்கள், தனது நண்பர்கள் பத்து பேர்களுடன் வண்டிகளில் உணவுக்குரிய பொருட்களுடன் தாந்தாமலைக் காட்டை அடைந்து காடுகளை வெட்டித் துப்பரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். அவர்கள் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது தற்போது விஸ்ணு ஆலயம் அமைந்துள்ள பகுதியில் பயங்கர ஓசையுடன் காடு அதிரும் காட்சியை உணர்ந்தனர். அனைவருக்கும் பெரும் பீதி ஏற்பட்டு விட்டது. என்றாலும் பாலிப்போடி அவர்களின் மன உறுதியால் தொடர்ந்து தங்கள் பணிகளைச் செய்தனர். தொடர்ந்து இரண்டு வாரங்கள் காடுகளை வெட்டி துப்பரவு செய்யும் வேலையைச் செய்தனர். துப்பரவு செய்து வரும் போது தற்போது ஆலயங்கள் உள்ள இடங்களில் பண்டை காலத்து கட்டடங்கள் அழிந்து சிதைவுண்டு கிடப்பதை கண்டனர். அவ்விடங்களை துப்பரவு செய்து சீர் செய்து, கொத்து பந்தல்களை போட்டு ஆலயங்களின் பெயர்களையும் வைத்தனர். தற்போது முருகன் ஆலயம் உள்ள பகுதியை வெட்டி துப்பரவு செய்யும் போது நில மட்டத்தில் இருந்து ஆறு, ஏழு அடி உயரத்தில் கருங்கல் மேடையில் தங்கத்தாலான அரை அடி உயரமான வேல் ஒன்று நடப்பட்டிருந்ததைக் கண்டனர். அந்த இடத்தை மேலும் துப்பரவு செய்து பார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பலசித்திர வேலைப்பாடமைந்த தூண்கள் கருங்கல் கட்டிகள் படிகள் இவைகள் சிதைவுண்டு நிலத்தில் புதையுண்டும் கிடப்பதை அவதானித்தனர். அவைகளை சீர் அமைத்து வேல் இருந்த மேடையை அப்படியே வைத்து சுற்றிவர மரந்தடிகளை கொண்டு கொத்துப் பந்தல் போட்டு ஆலயத்தை அமைத்தனர். மேலும் காடுகளை வெட்டுகையில், முருகன் ஆலயத்துக்கு மேற்குப் புறத்தில் சற்று தொலைவில் தாமரைக்குளம் இருப்பதையும் கண்டனர். அந்த தாமரைக் குளத்துள் திரு பாலிப்போடி அவர்கள் சென்ற போது தாமரை இலையின் மீது "தங்கத் தாமரைப் பூ" ஒன்று இருந்தது. அதை அவர் எடுத்து கொண்டு மூலஸ்தானத்தில் வேலுடன் வைத்து வழிபாடு செய்தனர். பின் அடியார்கள் செல்லக் கூடிய வகையில் ஒற்றையடி பாதையையும் அமைத்தனர்.

1956ம் ஆண்டு ஆடித் தீர்த்தம் தாந்தாமலையில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அடியார்கள் தாந்தாமலை முருகப் பெருமானின் தீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்டனர். அன்று முருகப் பெருமானின் மயில் பவனி வந்து அங்கு நின்ற காட்டுமா மர உச்சியில் அமர்ந்து பக்தர்கள் அனைவருக்கும் காட்சி கொடுத்தது. அதனைக் கண்டு பக்திப் பரவசம் அடைந்த அடியார்கள் இன்றும் அந்த அற்புதக் காட்சியைக் கூறுவதை நாம் கேட்கின்றோம். நான் 1958ம் ஆண்டு ஆலயம் சென்ற போது ஆலயத்தின் மேடையில் மத்தியில் இருந்த தங்க வேலைத்தரிசிக்கும் பேறு பெற்றேன் என்பதையும் குறிப்பிடவேண்டும். அதன்பின் அந்த வேல் அங்கு இல்லை.

1956ம் ஆண்டு ஆடித் தீர்த்த உற்சவம் முடிவுற்றதும் ஆலயத்தின் பராமரிப்பு பொறுப்பை ஸ்ரீ பால கிருஸ்ண சுவாமியிடம் ஒப்படைத்து விட்டு திரு. பாலிப்போடி அவர்களும் நண்பர்களும் ஊருக்கு சென்று விட்டனர். ஸ்ரீ பாலகிருஸ்ண சுவாமி அங்கு தங்கி, மேலும் காடுகளை வெட்டி துப்பரவு செய்து முருகப் பெருமானுக்கு பூசை செய்ய சித்தமானார். அதன்படி முதல் நாள் இரவு அவர் நித்திரை செய்யும் போது, தாந்தாமலைப் பிரதேசத்தை 13ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ஆடகசௌவுந்தரி அரசி ஸ்ரீ பாலகிருஸ்ண சுவாமியின் சொர்ப்பனத்தில் தோன்றி, தான் ஆட்சி புரிந்த பிரதேசம் அதுவென்றும் தான் முருகப் பெருமானை குல தெய்வமாக வழிபட்டதாகவும், தான் வழிபட்ட ஆலயம் தான் தற்போது முருகன் வீற்றிருக்கும் ஆலயம் எனவும் தனது அரண்மனைப் பகுதி காடுகளால் சூழப்பட்டிருப்பதாகவும் தான் நீராடிய தடாகம் தாமரைக் குளத்தில் மத்தியில் உள்ளதாகவும், தனது ஆட்சிக்காலப் பொருள்கள் யாவும் தான் நீராடிய தாமரைக்குளத்தின் தடாகத்தின் மத்தியில் மறை பொருளாக வைக்கப்பட்டுள்ளதாகவும், தான் குளக்கோட்டு மகாராசனைத் திருமணம் செய்து வாழ்ந்ததாகவும், தனது பூதப் படைகளைக் கொண்டு தான் குளக்கோட்டு அரசன் கந்தளாய் குளத்தைக் கட்டியதாகவும், தன்னை ஆதரிக்க வேண்டும் எனவும் வேண்டிய உதவிகளை புரிவதாகவும், இன்னும் பல இரகசியங்களையும் கூறி மறைந்தான். திரு. பாலிப்போடி அவர்களும் அவரது அடியார்கள் குழுவினரும் 1956ம் ஆண்டு தொடக்கம் ஆடித் தீர்த்த உற்சவத்தை வருடாவருடம் நடாத்தி வரலாயினர்கள். இப்படி ஆறு வருடங்கள் நடாத்தினார்கள். இவர்கள் ஓலையால் அமைக்கப்பட்ட ஆலயங்களை தகரத்தால் ஓரளவு நிரந்தர கட்டடங்களாக அமைத்தனர். வருடாவருடம் ஆடி மாதம் கதிர்காமத்துடன் இறுதி நாள் இரவு திருவிழாவும் காலையில் தீர்த்தமும் நடைபெற்று வரலாயிற்று. இதில் மூனக்காடு கிராம மக்கள் கூடுதலாகப் பங்கெடுத்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1958ம் ஆண்டு தாந்தாமலை சென்ற நான், வருடாவருடம் தீர்த்த உற்சவத்திலும் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன்.

அதன்பின் அவர்கள் இந்த ஆலய பரிபாலனத்தை கொக்கட்டிச் சோலை சிவன் கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். சிவன் கோயில் வண்ணக்கமார் 1964ம் ஆண்டு தொடக்கம் ஆடித் தீர்த்த உற்சவத்தை நடாத்திவரலானார்கள். அப்போது ஆடி உற்சவத்தை பரவலாக்க விரும்பி தேச மகாசபைக் கூட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுள சீட்டு மூலம் கிராமங்களுக்கு திருவிழாக்கள் வழங்கப்பட்டன. அதன்படி ஏழு திருவிழாக்களும் தீர்த்தமும் நடைபெற்று வந்தன. அவை எருவில் மகிழடித்தீவு, அரசடித்தீவு, முதலைக்குடா, கன்னன்குடா, கொக்கட்டிச் சோலை, முனைக்காடு ஆகிய கிராமங்கள் செய்து வரலாயின. கொக்கட்டிச் சோலை சிவன் கோயில் வண்ணக்கமாரின் அயராத முயற்சியினால் தாந்தாமலை ஆலய பகுதி வருடாவருடம் விருத்தி அடைந்து வரலாயிற்று. தகரத்தால் ஆன ஆலயங்கள் யாவும் கற்களால் கோபுர அமைப்புடன் ஆலயங்களாகக் கட்டப்பட்டன. ஆலய சுற்றாடல் வருடாவருடம் சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டு விருத்தியடைந்து வரலாயிற்று. ஆலய உற்சவமும் சிறப்பான முறையில் நடைபெற்று வரலாயிற்று. 1975ம் ஆண்டு முருகன் ஆலயம் கோபுர ஆலயமாக அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. என்றாலும் எந்தவித பெரிய நிதி நிலைமையோ, சொத்துக்களோ, ஆலயத்திற்கு சொந்தமான பொருள்களோ இருக்கவில்லை. ஆனால் 1956ம் ஆண்டு கொத்து பந்தல் போட்டு உற்சவம் நடத்தப்பட்ட ஆலயம் பின் ஓலையால் அமைக்கப்பட்டு பின் தகரத்தால் அமைக்கப்பட்டது. அதன் வண்ணக்கமாரின் அயராத முயற்சியினாலும் அடியார்களின் தன்னலமற்ற தொண்டினாலும் ஆலயங்கள் யாவும் கற்களால் சிறு கோபுரங்கள் அமைக்கப்பட்டு கட்டப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் பிரதேச மக்கள் மத்தியில் புதிய சிந்தனை உதயமாகியது. தாந்தாமலை ஆலய நிர்வாகத்தை ஒரு தனியான பரிபாலன சபையின் கீழ் கொண்டு வரவேண்டும் என்பது. இதற்கு முருகப் பெருமானின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது என்று தான் கூறவேண்டும். இதன்படி 1981ம் ஆண்டு புராட்டாதி மாதம் 6ந் திகதி ஸ்ரீ தாந்தாமலை ஆலய பரிபாலனசபை உருவாகியது. இதன் தலைவராக அரசடித்தீவு திரு பா.மயிலிப்போடி அவர்களும் செயலாராக கன்னன்குடா திரு க.மாணிக்கவாசகர் அவர்களும் பொருளாளராக மகிழடித்தீவு திரு ஞா.சிவசண்முகம் அவர்களும் முதலாவது பரிபாலன சபையின் உத்தி யோகஸ்தர்களாக தெரிவானார்கள். ஒவ்வொரு திருவிழா கிராமத்திற்கும் இருவர் வீதம் நிருவாக உறுப்பினர்களும் தெரிவானார்கள்.

அப்போது நிர்வாகசபையில் மொத்தம் 21 உறுப்பினர்கள் இருந்தார்கள். புதிய பரிபாலன சபையின் தெரிவால் தாந்தாமலை ஆலயம் மேலும் மறு மலர்ச்சி பெறத் தொடங்கியது. காலத்துக்குக்காலம் திருவிழாக்களும் அதிகரிக்கப் பட்டு வந்தன. தற்போது 21 நாள் திருவிழாவும், ஆடித்திங்கள் பூரணையுடன் கூடி வரும் திருகோண நட்சத்திர சுபமூர்த்த வேளையில் புண்ணிய தீர்த்த உற்சவத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறுகிறது. வருடாந்த உற்சவத்தை விட, வருடாந்த விசேட பூசைகளும் தினசரி பூசைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. முதலாவது ஆலய பரிபாலனசபை அமைக்கப்பட்டதும் முதல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தாந்தாமலையை உருவாக்கிய முன்னோடிகளான திரு. பாலிப்போடி அவர்களும் அவர்களுடன் சேர்ந்த பத்து அடியார்களின் புகைப் படங்களும் ஆலய பரிபாலனசபை மண்டபத்தில் வைக்கப்பட வேண்டும் என்பது, இது அவர்களுக்கு இப்பிரதேச மக்கள் கொடுக்கும் பெரும் கௌரவமாகும்.

கடந்த வருடம் தெரிவாகிய பரிபாலனசபையின் தலைவராக கன்னன்குடா திரு. க.மாணிக்கவாசகர் அவர்களும், செயலாளராக முனைக்காடு திரு. க.சிவகுருநாதன் அவர்களும், பொருளாளராக பனிச்சடி முன்மாரி திரு. ஞா.துரையப்பா அவர்களும் தெரிவானார்கள். பரிபாலனசபையில் தற்போது 46 உறுப்பினர்கள் உள்ளனர்.

தாந்தாமலை முருகன் தலத்தை உலகப் பிரசித்திபெறச் செய்து கதிர்காமம் போன்று சகல வளங்களுடனும் மாற்றம் பெறவேண்டும் என சைவ உலகம் எதிர்பார்க்கின்றது. அதற்கு அமைவாக தற்போது தாந்தாமலையில் பல அபிவிருத்தி வேலைகளும் நடை பெறுகின்றன. பல லட்சம் ரூபா செலவில் வேலைகள் நடைபெறுகின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சாண் உடம்பில் எத்தனை ஆச்சரியம்!

பொ. ம. ராசமணி, பாளையங்கோட்டை

இறைவன் ஈறில்லா பேரறிவாளி. அவனது படைப்பில் இம்மியும் குறை காண முடியாது.

அந்தக் காலத்தில் உரலில் நெல் குத்த உலக்கையை பயன்படுத்துவார்கள். உலக்கை மரத்திலானது. அதன் இரு முனைகளும் கல் உரலில் குத்தும் போது தேய்ந்து விடும் என்பதற்காக அம்முனைகளில் இரும்புப் பூண் கட்டி வைத்திருப்பார்கள்.

மாவிடிக்கப் பயன்படுவது கழுந்துலக்கை. அதில் குப்பிப்பூண் கட்டியிருப்பார்கள். மாவு இடிக்கும் போது உலக்கைக் கம்பும் தேயாது. மாவும் சீக்கிரம் இடிபடும்.

நம் உடலில் அதிகம் பயன்படும் உறுப்பு விரல்களே. விரல்களால பல் விளக்குகிறோம். பாத்திரம் தேய்க்கிறோம். கிள்ளி எடுக்கிறோம். அவ்வப்போது சொறிந்து கொள்கிறோம். இவ்வளவு வேலைகள் செய்யும் போது விரல் தேய்ந்து விட்டால் என்ன ஆவது? விரல் முனைகளில் நகத்தைக் கொடுத்து விரல் தேயாதவாறு காத்துக்கொண்டவன் கடவுள்.

குனிந்து வேலை செய்கிறோம். அப்போது நெற்றி வியர்வை நிலத்தில் விழுகிறது. குறுக்கு வலிக்கிறதென்று நிமிரும் போது நெற்றி வியர்வை கண்ணுக்குள் விழுந்து விடும். கண்ணும் புண்ணும் ஒன்றே. புண்ணில் உப்புத் தண்ணீர் பட்டால் கரிப்பதைப் போல கண்ணில் உப்பு நீரான கண்ணீர் பட்டால் அதுவும் கரிக்கும். பிறகு கண் வலிக்கும். இறைவன் கண்ணுக்கு மேல் அடர்ந்த புருவத்தை வைத்தான். இதனால் குனிந்தாலோ, நிமிர்ந்தாலோ நெற்றி வியர்வை கண்ணில் பட்டு கண் கரிக்காது. எவ்வளவு வியப்பு!

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை அவன் உடம்பிலுள்ள ஒரே ஓர் உறுப்பு வளராது. பிறந்த போதுள்ள அளவே அது இறக்கும் வரை அது இருக்கும். அதுதான் கண்ணின் கருவிழி. கருவிழி லென்ஸ். அது வளர்ச்சி அடைந்தால் நமக்கு மேடு பள்ளம் சரியாகத் தெரியாது. மாடிப்படியில் ஏறும் போதும் இறங்கும் போதும் தடுக்கி விழுந்து காயமடைவோம்.

கண்ணில் வெள்ளைவிழிப் பகுதி வளரும். கருவிழி மட்டுமே வளராது. அதனால் இனி வளரக்கூடிய வெள்ளைவிழி நடுவே இனி வளரவே வளராத கருவிழி பெரிதாகத் தெரிகிறது குழந்தைகள் முகத்தில். அதனால் தான் குழந்தைகளை கண்ணே, மணியே என்று சொல்லிக் கொஞ்சுகிறோம்.

கிணற்றில் கிடக்கும் தண்ணீரின் அளவைக் குறிப்பிடும் பொழுது இரண்டு ஆள் உயரம் என்பர். தரைமட்டத்திலிருந்து தண்ணீர் வரையும் உள்ள தூர அளவான கயிற்றின் நீளத்தைக் குறிக்கும் போது மூன்று பாகம் கயிறு தேவை என்கிறோம்.

ஒரு பாகம் என்பது ஓர் ஆள் உயரம். எல்லா மனிதரும் தனது கை அளவினால் எட்டுச் சாண் உடையவராக இருப்பர். ஒரு சாண் என்பது நான்கு விரல்கள் விரிக்கப்பட்ட கையில் பெருவிரல் முனைக்கும் சுண்டு விரல் முனைக்கும் இடையில் உள்ள தூரமே!

இரு கைகளையும் பக்கவாட்டில் விறைப்பாக நீட்டினால், இரு கைகளின் நடுவிரல் முனைகளுக்கு இடைத்தூரம் ஒரு பாகம் என்பதும் எட்டுச்சாண் தூரமுடையதே.!

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
# பிறந்தநாள் அறநிதிய அறக்கொடை கல்வி நிதியம் பெறுவோர் விபரம்.

## 07-01-2007 ஞாயிற்றுக்கிழமை
## வடமராட்சி கல்வி வலயம்.

| தொ/இல | மாணவர்கள் பெயர் | பாடசாலைப் பெயர் |
|---|---|---|
| 1 | T.வைஸ்ணவன் | தேவரையாளி இந்துக்கல்லாரி |
| 2 | S. குபேந்திரன் | தேவரையாளி இந்துக்கல்லாரி |
| 3 | T. கஸ்தூரி | தேவரையாளி இந்துக்கல்லாரி |
| 4 | K. நவநிதா | தேவரையாளி இந்துக்கல்லாரி |
| 5 | I. சஞ்சிகா | யா/மெதடிஸ் பெண்கள் கல்லூரி |
| 6 | T. தர்சிகா | யா/மெதடிஸ் பெண்கள் கல்லூரி |
| 7 | T. கஸ்தூரி | யா/மெதடிஸ் பெண்கள் கல்லூரி |
| 8 | V. ஜெனிபா | யா/மெதடிஸ் பெண்கள் கல்லூரி |
| 9 | S. சிவராம் | யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி |
| 10 | T. ஜெயந்தன் | யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி |
| 11 | K. மயூரன் | யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி |
| 12 | J. ராஜசீலன் | யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி |
| 13 | P. மேரி விஜிதா | யா/சென்தோமஸ் றோ. க. க. பா |
| 14 | A. அலுசியா | யா/சென்தோமஸ் றோ. க. க. பா |
| 15 | A. சந்தானந்தமேரி | யா/சென்தோமஸ் றோ. க. க. பா |
| 16 | A. அனுசா | யா/சென்தோமஸ் றோ. க. க. பா |
| 17 | N. லக்ஸ்மன் | J/Puloly MMTMS |
| 18 | V. ரங்கநாதன் | J/Puloly MMTMS |
| 19 | L. ரஜீவன் | J/Puloly MMTMS |
| 20 | T. சிவராமி | J/Puloly MMTMS |
| 21 | K. ஆனந்தசுகி | J/Puloly MMTMS |
| 22 | A. அருள்தாஸ் | யா/மணற்காடு றோ. க. த. க. பா |
| 23 | R. யூலியஸ்ரஜனா | யா/மணற்காடு றோ. க. த. க. பா |
| 24 | V. மேரிஉஜனா | யா/மணற்காடு றோ. க. த. க. பா |
| 25 | A. மேரிநிஷாந்தினி | யா/மணற்காடு றோ. க. த. க. பா |
| 26 | T. உதயகுமார் | யா/விக்னேஸ்வராக் கல்லூரி |
| 27 | R. அனுசா | யா/விக்னேஸ்வராக் கல்லூரி |
| 28 | K. தீபிகா | யா/விக்னேஸ்வராக் கல்லூரி |
| 29 | K. பானுரேகா | யா/விக்னேஸ்வராக் கல்லூரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 30 | T. பாலகுமார் | யா/தும்பளை சிவப்பிரகாச. ம. வி |
| 31 | R. மேனன் | யா/தும்பளை சிவப்பிரகாச. ம. வி |
| 32 | A. அஜந்தினி | யா/தும்பளை சிவப்பிரகாச. ம. வி |
| 33 | T. வாசுகி | யா/தும்பளை சிவப்பிரகாச. ம. வி |
| 34 | M. விஜிகுகன் | யா/அம்பன் அ. மி. த. க. பா |
| 35 | S. சங்கீர்த்தனா | யா/அம்பன் அ. மி. த. க. பா |
| 36 | S. சசிகா | யா/அம்பன் அ. மி. த. க. பா |
| 37 | R. மைதிலிக்கா | யா/அம்பன் அ. மி. த. க. பா |
| 38 | A. ஆஞ்சனா | யா/கரணவாய் மகா வித்தியாலயம் |
| 39 | S. தட்சாயினி | யா/கரணவாய் மகா வித்தியாலயம் |
| 40 | Y. ஜெயநந்தினி | யா/கரணவாய் மகா வித்தியாலயம் |
| 41 | M. கோகுலவேணி | யா/கரணவாய் மகா வித்தியாலயம் |
| 42 | S. நிரேசினி | யா/குடத்தனை தமிழ். க. பா |
| 43 | மு. தனுசியா | யா/குடத்தனை தமிழ். க. பா |
| 44 | து. சுஜெந்தினி | யா/குடத்தனை தமிழ். க. பா |
| 45 | சு. ரஜீவனா | யா/குடத்தனை தமிழ். க. பா |
| 46 | ஸ்ரீ. சுகன்யா | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 47 | ஸ்ரீ. துளசிதா | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 48 | ஸ்ரீ. செல்வப்பிரியா | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 49 | து. ஜெனிதா | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 50 | வு. ஜெனிற்றா | யா/நாகர் கோயில் ம. வி |
| 51 | ஸ்ரீ. உசேந்தினி | யா/நாகர் கோயில் ம. வி |
| 52 | து. தட்சாயினி | யா/நாகர் கோயில் ம. வி |
| 53 | சு. தமிழ்வாணி | யா/நாகர் கோயில் ம. வி |
| 54 | மு. சிவகௌரி | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 55 | மு. அலன்சஜிதன் | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 56 | மு. ரஜீகன் | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 57 | மே. ஜெயக்குமார் | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 58 | சு. தர்சினி | யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் |
| 59 | சு. மங்கயற்கரசி | யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் |
| 60 | ஸ்ரீ. கலாதாசன் | யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் |
| 61 | ஐ. மயூரி | யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் |
| 62 | ஸ்ரீ. சுகன்ராஜ் | யா/பருத்துத்துறை சி. வி. வி |
| 63 | ஸ்ரீ. ரஜீபன் | யா/பருத்துத்துறை சி. வி. வி |
| 64 | ஹ. நிரோஜ் | யா/பருத்துத்துறை சி. வி. வி |
| 65 | மு. இந்துசா | யா/பருத்துத்துறை சி. வி. வி |
| 66 | மே. அஜந்தன் | யா/புற்றளை மகா வித்தியாலயம் |
| 67 | வு. கஜரஞ்சிதன் | யா/புற்றளை மகா வித்தியாலயம் |
| 68 | ஸ்ரீ. சுதாகரன் | யா/புற்றளை மகா வித்தியாலயம் |
| 69 | R. சர்மிளா | யா/புற்றளை மகா வித்தியாலயம் |
| 70 | S. கவிதா | யா/புற்றளை மகா வித்தியாலயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 71 | N. ரவீந்திரம் | யா/கலட்டி றோ. க. த. ம. வி |
| 72 | M. றொபேட் கெனடி | யா/கலட்டி றோ. க. த. ம. வி |
| 73 | R. டினேஸ் | யா/கலட்டி றோ. க. த. ம. வி |
| 74 | M. லக்ஸன் | யா/கலட்டி றோ. க. த. ம. வி |
| 75 | K. ஜெகதீஸ் | யா/அல்வாய் அம்பாள் வி. |
| 76 | S. நிர்மலன் | யா/அல்வாய் அம்பாள் வி. |
| 77 | S. ரேக்கா | யா/அல்வாய் அம்பாள் வி. |
| 78 | S. சுதர்சன் | யா/அல்வாய் அம்பாள் வி. |
| 79 | S. வினோத்ராஜ் | யா/அல்வாய் சின்னத்தம்பி வி. |
| 80 | B. கிருசாஜினி | யா/அல்வாய் சின்னத்தம்பி வி. |
| 81 | R. குகதாசன் | யா/நெல்லியடி ம. ம. வி. |
| 82 | R. வாகீசன் | யா/நெல்லியடி ம. ம. வி. |
| 83 | P. பிரசாத் | யா/நெல்லியடி ம. ம. வி. |
| 84 | B. அகிலன் | யா/நெல்லியடி ம. ம. வி. |
| 85 | K. மஞ்சுதன் | யா/நெல்லியடி ம. ம. வி. |
| 86 | B. பிறேமகுமாரி | யா/கரனவாய் பொன்னம்பல வி. |
| 87 | S. நிருஜா | யா/கரனவாய் பொன்னம்பல வி. |
| 88 | V. வசந்தா | யா/வடமத்தி பெண்கள் கல்லூரி |
| 89 | A. அகல்யா | யா/வடமத்தி பெண்கள் கல்லூரி |
| 90 | K. வளர்மதி | யா/வடமத்தி பெண்கள் கல்லூரி |
| 91 | K. அபர்ணா | யா/வடமத்தி பெண்கள் கல்லூரி |
| 92 | S. தாரணி | யா/வடமத்தி பெண்கள் கல்லூரி |
| 93 | J. மயூரன் | யா/இமையாணன் அ. த. க. பா |
| 94 | J. அமல்ராஜ் | யா/இமையாணன் அ. த. க. பா |
| 95 | S. சுமைதா | யா/இமையாணன் அ. த. க. பா |
| 96 | T. சபேஸ் | யா/இமையாணன் அ. த. க. பா |
| 97 | V. கெளதமன் | யா/ ஹாட்லிக் கல்லூரி |
| 98 | S. நிரேசன் | யா/ ஹாட்லிக் கல்லூரி |
| 99 | K. சுபநாதன் | யா/ ஹாட்லிக் கல்லூரி |
| 100 | T. பிரணவன் | யா/ ஹாட்லிக் கல்லூரி |

❋❋❋ ❋❋❋ ❋❋❋


## உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

**அலுவலகம்:**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,**
**கோவில் வீதி,**
**நல்லூர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவலர் பெருமான்

குருபூசை 11.12.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவண்ணாமலைத் தீபம்



நெய்த்திரி மலையில்
ஏற்றப்படும் காட்சி



பிறநாட்டு பத்தர் ஒருவர்
நெய்விளக்கேற்றுவதற்கு
நெய்யைச் சுமந்தவாறு
மலை ஏறும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org